**<u>சுருக்கம்</u>**

சமூக நலம் – ஊனமுற்றோர் நலம் – ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு பெறும் வகையில் பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானியத்துடன் வங்கிக் கடன் பெற்று சுய வேலைவாய்ப்புகள் அளிக்கும் திட்டம் – ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5% பங்குத் தொகை தமிழக அரசே வழங்கும் திட்டத்திற்கு 2009–2010ம் ஆண்டு திட்டத் தொடராணையும், ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் (சந 4) துறை

அரசாணை(நிலை) எண்.152 நாள்: 25.11. 2009

கார்த்திகை 9, திருவள்ளுவர் ஆண்டு 2040

<u>படிக்கப்பட்டது:-</u>

1. அரசாணை (நிலை) எண். 112, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 22.8.2008.
2. அரசாணை (நிலை) எண். 15, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 12.2.2009.

<u>மேலும் படிக்கப்பட்டது:-</u>

3. முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண். 5195/ஊம.3/2009, நாள் 19.6.2009 மற்றும் 9.10.2009.

---

**<u>ஆணை:</u>**

பிரதம மந்திரி வேலைவாய்ப்புத் திட்டம் (PMRY) மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (REGP) ஆகிய இரு திட்டங்களையும் ஒன்றினைத்து ஊரக மற்றும் நகர்புறங்களில் சுயவேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கும் விதமாக மத்திய அரசு, பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) என பெயரிட்டு 31.3. 2008 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு கதர் கிராமத் தொழில் ஆணையம் (KVIC) முகவராக செயல்பட்டு வருகிறது. மேலும் மாநில அளவில் இத்திட்டம் கதர் கிராம தொழில் வாரியம், மாவட்ட தொழில் மையம் (DIC) மற்றும் வங்கிகள் ஆகியவை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு உற்பத்தி பிரிவில் ரூ.25.00 இலட்சம் வரையிலும் தொழில் பிரிவில் ரூ.10.00 இலட்சம் வரையிலும் கடன் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொதுப்பிரிவில் உள்ள பயனாளிகள் 10% பங்குத் தொகை செலுத்த வேண்டும். இவர்கள் நகர்ப்புறங்களில் உள்ளவர்களாக இருப்பின் கடன் தொகையில் 15% மான்யமாகவும் கிரமப்புறங்களில் இருப்போருக்கு 25% மான்யமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், முன்னாள் ராணுவத்தினர், ஊனமுற்றோர் மற்றும் மலைகளில் மற்றும் எல்லைப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு கடன்

வழங்கப்படுகிறது. இப்பயனாளிகள் 5% பங்குத் தொகை செலுத்த வேண்டும். இவர்கள் நகர்புறங்களில் இருந்தால் திட்ட மதிப்பீட்டில் 25% மான்யமும் கிராமப்புறங்களில் இருந்தால் 35% மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஊனமுற்றோர் சுய வேலைவாய்ப்பு பெறும் வகையில் பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானியத்துடன் வங்கிக் கடன் பெற்று சுய வேலைவாய்ப்புகளை அளிக்கும் திட்டத்தின் கீழ் ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5 சதவிகித பங்குத் தொகையினையும் தமிழக அரசே ஏற்கும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே 2–ல் காணும் அரசாணையில் இத்திட்டத்தில் முதல் படியாக 500 ஊனமுற்றோர் பயன்பெறும் வகையில் 2008–2009ம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. 2008–2009ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் மேற்படி திட்டத்திற்கு அடையாள ஒதுக்கீடு மட்டுமே ஒதுக்கப்பட்டது என்றும் அந்நிதியாண்டின் இறுதியில் நிதி ஒதுக்கீடு வழங்கியதாலும் இத்திட்டத்தை 2008–2009ம் ஆண்டு செயல்படுத்த இயலவில்லை என்றும் தெரிவித்து 2009–2010ம் ஆண்டிற்கு திட்டத் தொடராணையும் ரூ.5.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள அனுமதியும் வழங்குமாறு முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் 2009–2010ம் ஆண்டில் மாவட்டங்களில் கூடுதலாக விண்ணப்பம் பெறப்பட்டால் அதன் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கலாம் என்றும் இத்திட்டத்தின் கீழ் ஊனமுற்றோர் பயனடையும் வகையில், பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்ட வழிகாட்டி நெறிமுறைகள்படி கீழ்க்கண்டவாறு தகுதிகளை நிர்ணயிக்கலாம் எனவும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

<u>**தகுதிகள்:**</u>

1. தேசிய அடையாள அட்டை வைத்திருக்கும் ஊனமுற்ற நபர்கள் (உடல் ஊனமுற்றோர், காதுகேளாதோர் மற்றும் வாய் பேசாதோர், கண்பார்வையற்றோர்)
2. 18 வயது நிரம்பியிருக்க வேண்டும்.
3. வருமான வரம்பு ஏதுமில்லை.
4. உற்பத்திப் பிரிவின் கீழ் 10 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட திட்டங்களுக்கும், சேவைப் பிரிவின் கீழ் 4 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட திட்டங்களுக்கும் 8ஆம் வகுப்பு தேறியிருக்க வேண்டும்.
5. புதிய திட்டங்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பங்குத் தொகை கோரலாம்.
6. வேறு எந்த திட்டத்திலும் பயனடையாத ஊனமுற்றோர் சுய உதவிக் குழுக்கள் விண்ணப்பிக்கலாம்.

<u>**தேவைப்படும் ஆவணங்கள்:**</u>

1. விண்ணப்ப மனு.
2. தேசிய ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை நகல்.

3. திட்ட அறிக்கை / சிறிய திட்டங்களுக்கான பொருளாதார விவரங்கள்.

4. தளவாடங்கள் / மெஷின்கள் கொட்டேஷன்.

5. கட்டிடம் கட்டுவதாக இருந்தால் கட்டிட எஸ்டிமேட் மற்றும் ப்ளூ பிரிண்ட்.

6. நிலப் பத்திர நகல் / குத்தகைப் பத்திரம் / வாடகை ஒப்பந்தப் பத்திரம்.

7. ஆண் விண்ணப்பதாரராக இருந்தால் சாதிச் சான்றிதழ்.

8. உற்பத்திப் பிரிவில் பத்து லட்ச ரூபாய்க்கு அதிகமாக இருந்தாலோ, சேவைப் பிரிவில் ஐந்து லட்ச ரூபாய்க்கு அதிகமாக இருந்தாலோ, படிப்புச் சான்றிதழ் (குறைந்தது எட்டாம் வகுப்பு தேறியவராக) இருக்க வேண்டும்.

9. முகவரிக்கான சான்றிதழ் நகல் மற்றும் அடையாளத்திற்கான சான்றிதழ் நகல் (ரேஷன் கார்டு நகல் அல்லது வாக்காளர் அடையாள அட்டையின் நகல்) மாநில–மத்திய அரசு சான்று அளித்து புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையின் நகல்.

10. இரண்டு வாரங்கள் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்ட பயிற்சியினை ஏற்கனவே பெற்றிருந்தால் அதற்கான பயிற்சிச் சான்றிதழின் நகல்.

<u>திட்டம் செயல்படுத்தப்படும் விதம்:</u>

1. மாவட்ட ஆட்சியர் தலைமை வகிக்கும் மாவட்ட தெரிவுக்குழு மூலமாக நடக்கும் நேர்முகத் தேர்வு நடைமுறைப்படி ஊனமுற்ற பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

2. மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள் ஊனமுற்ற பயனாளிகளிடமிருந்து சரியான முறைப்படி விண்ணப்பங்கள் பெற்று தேர்வுக் குழுவிற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

3. தேர்வு செய்யப்பட்டு, வங்கிக் கடன் ஒப்பளிக்கப்பட்ட ஊனமுற்ற பயனாளிகளுக்கு மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் மூலமாக பங்குத் தொகை பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் / மேலாளர், காதி கதர் கிராமத் தொழில் ஆகியோருக்கு விடுவிக்கப்படும்.

4. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்த பின்னர் ஊனமுற்றோர் சுய வேலைவாய்ப்பு பெறும் வகையில் பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானியத்துடன் வங்கிக் கடன் பெற்று சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ள ஊனமுற்றோர் செலுத்த வேண்டிய 5% பங்குத் தொகையை உச்சவரம்பின்றி அரசே ஏற்கும் திட்டத்தினை 2009–10ம் நிதியாண்டில் செயல்படுத்திட திட்டத் தொடராணையும், ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பும் வழங்கி ஆணையிடுகிறது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பயனடைய தேவையான தகுதிகள் பயனாளிகள் தேர்வு செய்யப்படும் முறை மற்றும் திட்டத்தை செயல்படுத்தும் விதம் போன்றவற்றை மேலே பத்தி மூன்றில் கூறப்பட்டுள்ளவாறு பின்பற்றுமாறும் முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**5.** மேலே பத்தி 4**–**ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

" **2235–** சமூக பாதுகாப்பும் நலனும்**–02.**சமூக நலன் **–101–** உடலூனமுற்றோர் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II– மாநிலத் திட்டம் –"ML"பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் உடலூனமுற்றோர் சுயவேலை வாய்ப்புப் பெற உதவித் தொகை **–09.** உதவித் தொகை**–03.** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".

(த.தொ. க. எண். **2235–02–101–**ML**–0982**)

**6.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.3152/FS/P/09 நாள் **18.11.2009** இசைவுடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகன ராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை**–6.**
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள் (ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை**–5/35.**
மாநில தலைமைக் கணக்காயர்**–9/18/35.**
மாநில தலைமைக் கணக்காயர் **–18/35** (பெயரில்)

**நகல்:**

முதலமைச்சர் அலுவலகம், சமூக நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை**–9.**
நிதி (சமூக நலம்) / வரவு செலவு (பொது–II)த்துறை, சென்னை
இ.கோ/ உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.